**சுருக்கம்**

தொழில்நுட்பக் கல்வி – 20.9.2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பு – அரசு பள்ளிகளில் படித்து ஏழுரை விழுக்காடு (7.5%) முன்னுரிமையின் அடிப்படையில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் பொறியியற் கல்லூரிகளில் சேரும் மாணாக்கர்களுடைய கல்விக்காக ஆகக்கூடிய செலவினங்களான கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் உள்ளிட்ட அனைத்துக் கட்டணங்களையும் அரசே வழங்குதல் – நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

**உயர்கல்வித் (ஜே2) துறை**

அரசாணை( நிலை) எண்: 221 நாள்: 15.11.2021

பிலவ வருடம், ஐப்பசி–29

திருவள்ளுவர் ஆண்டு, 2052

படிக்கப்பட்டவை :

1) தமிழ்நாடு அரசுப் பள்ளிகளின் மாணவர்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் இளநிலை தொழிற்கல்வி படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டம், 2021 ( சட்டம் எண். 14 /2021).
2) அரசாணை (நிலை) எண். 167, உயர்கல்வித் (ஜே2) துறை , நாள் 31.8.2021.
3) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 20.9.2021 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பு.
4) தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கடிதம் எண். 3300/ TNEA/ 2021 Fee Reimbursement நாள் 29.10.2021.

*******

**ஆணை:**

20.9.2021 அன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது: –

"அரசு பள்ளிகளில் படித்து 7.5 சதவீத இடஒதுக்கீடு மூலம் தொழிற் கல்லூரிகளில் சேரும் மாணவர்களுடைய கல்விக்காக ஆகக்கூடிய செலவினங்களான கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், உள்ளிட்ட அனைத்தும் அரசால் ஏற்றுக் கொள்ளப்படும்".

2. தமிழ்நாடு அரசுப் பள்ளிகளின் மாணவர்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் இளநிலை தொழிற்கல்வி படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டம்.

2021 (சட்டம் எண். 14 /2021) இன்படி, பல்கலைக்கழகங்கள், தனியார் கல்லூரிகள், அரசு உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் அரசு கல்லூரிகளில் வழங்கப்படும் பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம், மீன்வளம், சட்டம் மற்றும் பிற தொழிற்கல்வி பட்டப் படிப்புகளுக்கான அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கான சேர்க்கையில், மாநில அரசுப் பள்ளிகளில் ஆறு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரையில் பயின்ற மாணவர்களுக்கு ஏழரை விழுக்காடு (7.5%) முன்னுரிமையின் அடிப்படையில் இடங்கள் ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு பொறியியல் சேர்க்கையில் அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு 7.5 விழுக்காடு முன்னுரிமையின் அடிப்படையில் ஒதுக்கீடு வழங்குவது குறித்த வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டன.

4. 20.9.2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் உரிய கருத்துருவினை கீழ்க்கண்டவாறு அரசுக்கு அனுப்பியுள்ளார்:-

(i) 2021-22 ஆம் கல்வியாண்டில் பொறியியல் சேர்க்கையில் அரசுப் பள்ளி மாணாக்கர்களுக்கான 7.5 விழுக்காடு முன்னுரிமையின் அடிப்படையில் சேர்ந்த மாணாக்கர்களின் எண்ணிக்கை 7,876 ஆகும்.

(ii) மொத்த படிப்புக் கட்டணம் (Course fee) என்பது, சேர்க்கைக் கட்டணம், கல்விக் கட்டணம், நூலகக் கட்டணம், இணைய கட்டணம் மற்றும் சமூக நிதி(Internet Fee and Society Charges), வளர்ச்சி நிதி, சிறப்புக் கட்டணம், கணினி நிதி, கல்வி ஊடக சேவை நிதி(Education Media Service Charges), பல்கலைக் கழக கலை மற்றும் தொழில் சேவை நிதி (University Cultural and Professional Society Fee), மாணவர் விபத்து மற்றும் மருத்துவ சேவை நிதி, பதிவு மற்றும் சேர்க்கைக் கட்டணம், சான்றிதழ் சரிபார்ப்புக் கட்டணம், செஞ்சிலுவைச் சங்கம் உறுப்பினர் கட்டணம் மற்றும் கொடி நாள் நிதி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். விடுதிக் கட்டணம் (Hostel fee) என்பது நுழைவுக் கட்டணம், நிர்வாகக் கட்டணம், விடுதி அடிப்படை வசதிக் கட்டணம் (Hostel Amenities Fees), வளர்ச்சிக் கட்டணம், அறை வாடகை, மின்சார கட்டணம், பாதுகாப்பு நிதி (Security Charges) மற்றும் மாதாந்திர உணவுக்கான கட்டணம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

(iii) கட்டணங்களை நிர்ணயிக்கும் குழுவால் சுயநிதி பொறியியல் கல்லூரிகளுக்கான கல்விக் கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்படுகின்றன. அதன்படி, ஒற்றைச் சாளர கலந்தாய்வு மூலம் சேர்க்கை பெறும் மாணாக்கர்களுக்கு தரச் சான்று பெறாத (Non-accredited) படிப்புகளுக்கு ரூ.50,000/-ம், தரச் சான்று பெற்ற (Accredited) படிப்புகளுக்கு ரூ.55,000/-ம் ஒருமுறை பெறப்படும் வளர்ச்சி நிதியாக(Development charges) ரூ.5,000/-ஆக குழு, கட்டணங்களை நிர்ணயித்துள்ளது. வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சிக்

கட்டணங்களையும் இக்குழு நிர்ணயிக்கிறது. மேலே தெரிவிக்கப்பட்டுள்ள கட்டணங்களானது, கல்விக் கட்டணம், நுழைவுக் கட்டணம், சிறப்புக் கட்டணம், ஆய்வகம்/ கணினி/ இணையக் கட்டணம், நூலகக் கட்டணம், விளையாட்டுக் கட்டணம், அடிப்படை வசதிக்கான கட்டணம், கூடுதல் பாடத்திட்டக் கட்டணம் மற்றும் இதர தொடர் செலவினங்களையும் உள்ளடக்கியதாகும். கல்விக் கட்டணக் குழு நிர்ணயித்துள்ள கட்டணத்தின்படி சுயநிதிக் கல்லூரிகளில் படிக்கும் மாணாக்கர்களுக்கு படிப்புக் கட்டணத்தை வழங்கலாம்.

(iv) மாநிலம் முழுவதிலும் உள்ள பொறியியல் கல்லூரிகளில் பெறப்படும் விடுதிக் கட்டணம் கல்லூரிகளுக்கிடையே வேறுபடுகிறது. தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் இயங்கி வரும் அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் ரூ.41,600/- விடுதிக் கட்டணமாக பெறப்படுகிறது. மேலும் மாநிலத்தில் பல இடங்களில் உள்ள பொறியியல் கல்லூரிகளிலும் விடுதிக் கட்டணமாக ரூ.40,000/- பெறப்படுகிறது. எனவே, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சுயநிதி பொறியியல் கல்லூரிகளிலும் ஒரு மாணவருக்கான ஆண்டு விடுதிக் கட்டணமாக ரூ.40,000/- என நிர்ணயிக்கலாம்.

(v) மேற்காண் கட்டணங்கள் தவிர வேறு எந்த கட்டணங்களையும் அல்லது நிதியையும் மாணாக்கர்களிடம் பெறக்கூடாது என கல்வி நிறுவனங்களுக்கு அறிவுறுத்தலாம்.

(vi) கல்லூரி பேருந்துகளைப் பயன்படுத்தி கல்லூரிக்கு வரும் மாணாக்கர்களுக்கு (Days Scholars) அதிகபட்சமாக ரூ.25,000/- அல்லது கல்லூரி வசூலிக்கும் பேருந்துக் கட்டணம் இதில் எது குறைவோ, அதனை போக்குவரத்து கட்டணமாக (Transportation Fee) அவர்களுக்கு வழங்கலாம்.

(vii) மாணவர்களிடம் திருப்பி வழங்கக் கூடிய காப்புத் தொகை கட்டணம் (Caution Deposit), நூலகக் கட்டணம் மற்றும் உணவு விடுதிக்கான காப்புத் தொகை கட்டணம் போன்றவற்றை மாணாக்கர்களிடமிருந்து வசூலிக்கக் கூடாது என கல்லூரிகளுக்குத் தெரிவிக்கலாம்.

கல்லூரிவாரியாக செலவினங்களை பெற்று அதனை சரிபார்த்து கல்வி நிறுவனங்களுக்கு தொகையினை பெற்றுத் தருவதற்கும் மற்றும் ஒவ்வொரு ஆண்டும் ஆகும் செலவின விவரங்களைப் பெற்று அரசுக்கு அனுப்புவதற்கும் அனுமதி வழங்குமாறு தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை நடைமுறைப்படுத்துவதற்காக, 2021-22 ஆம் கல்வி ஆண்டில் 7.5 விழுக்காடு முன்னுரிமை அடிப்படையில் பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கை பெற்ற அரசு பள்ளி மாணாக்கர்களுக்கான படிப்புக் கட்டணம், விடுதிக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களை வழங்குவதற்காக ரூ.94,65,76,981/-

(ரூபாய் தொண்ணூற்று நான்கு கோடியே அறுபத்தைந்து இலட்சத்து எழுபத்தி ஆறாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தொன்று மட்டும்) ஒப்பளிப்பு செய்யுமாறு தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்.

5. 7.5 விழுக்காடு முன்னுரிமை அடிப்படையில் பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கை பெற்ற அரசு பள்ளி மாணாக்கர்களுக்கான படிப்புக் கட்டணம், விடுதிக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களை வழங்குவதற்கான தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:-

அ) 7.5 விழுக்காடு முன்னுரிமை அடிப்படையில் பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கை பெற்ற அரசு பள்ளி மாணாக்கர்களுக்கான படிப்புக் கட்டணம், விடுதிக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் பின்வருமாறு வழங்கப்படும்:

i) **மொத்த படிப்புக் கட்டணம் (Course Fee) –**

(a) அண்ணா பல்கலைக்கழகத் துறைகள், அண்ணா பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகள், அரசு கல்லூரிகள், அரசு உதவி பெறும் கல்லூரிகள், அண்ணாமலை பல்கலைக்கழகம் மற்றும் ஒன்றிய அரசு நிறுவனங்கள் நடத்தும் பாடப் பிரிவுகளுக்கான படிப்புக் கட்டணங்கள் அக்கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.

(b) அரசு நிதியுதவி பெறும் கல்லூரிகள் நடத்தும் சுயநிதி பாடப்பிரிவுகள் மற்றும் சுயநிதி பொறியியற் கல்லூரிகள் நடத்தும் பாடப் பிரிவுகளுக்கான படிப்புக் கட்டணங்கள் கல்விக் கட்டண நிர்ணயக்குழு நிர்ணயம் செய்தபடி, அக்கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படும். (எ.கா. 2021-22 ஆம் கல்வியாண்டில், தரச் சான்று பெறாத படிப்புகளுக்கு ரூ.50,000/-மும், தரச் சான்று பெற்ற படிப்புகளுக்கு ரூ.55,000/-மும் ஒருமுறை பெறப்படும் வளர்ச்சி நிதியாக ரூ.5,000/-மும் வழங்கப்படும்). **வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி கட்டணம் (Placement and Training Fee)** – கல்விக் கட்டணக் குழு நிர்ணயித்துள்ள தொகை வழங்கப்படும்.

ii) **விடுதிக் கட்டணம் (Hostel Fee)** – அதிகபட்சமாக ரூ. 40,000/- அல்லது கல்லூரி வசூலிக்கும் விடுதிக் கட்டணம் இதில் எது குறைவோ அந்த தொகை விடுதிக் கட்டணமாக வழங்கப்படும்.

iii) **போக்குவரத்து கட்டணம் (Transportation Fee)** – கல்லூரி பேருந்துகளை பயன்படுத்தி கல்லூரிக்கு வரும் மாணாக்கர்களுக்கு (Days Scholars) அதிகபட்சமாக ரூ.25,000/- அல்லது கல்லூரி வசூலிக்கும் பேருந்துக் கட்டணம் இதில் எது குறைவோ அந்த தொகை போக்குவரத்து கட்டணமாக வழங்கப்படும்.

ஆ) தற்போது 7.5 விழுக்காடு முன்னுரிமை அடிப்படையில் மருத்துவ படிப்பில் பயிலும் மாணாக்கர்களுக்கு தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகத்தின் வழியாக மருத்துவ கல்லூரிகளுக்கு கட்டணங்கள் வழங்கப்படுகின்றன. 7.5 விழுக்காடு முன்னுரிமை அடிப்படையில் பொறியியல் படிப்பில் பயிலும் மாணாக்கர்களுக்கான கட்டணங்களும், தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் ஒப்புதலின் அடிப்படையில், தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகத்தின் வழியாக கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படும். 2021-22 ஆம் கல்வி ஆண்டில் 7.5 விழுக்காடு முன்னுரிமை அடிப்படையில் பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கை பெற்ற அரசு பள்ளி மாணாக்கர்களுக்கு படிப்புக் கட்டணம் வழங்குவதற்காக ரூ.45.61 கோடியும் (ரூபாய் நாற்பத்தைந்து கோடியே அறுபத்தோரு இலட்சம் மட்டும்), விடுதிக்கட்டணத்திற்காக ரூ.25.32 கோடியும் (ரூபாய் இருபத்தைந்து கோடியே முப்பத்திரண்டு இலட்சம் மட்டும்) போக்குவரத்துக் கட்டணத்திற்காக ரூ.3.35 கோடியும் (ரூபாய் மூன்று கோடியே முப்பத்தைந்து இலட்சம் மட்டும்) இந்த கல்வியாண்டு (2021-2022) வழங்குவதற்கு தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகத்திற்கு (Tamil Nadu Medical Services Corporation Ltd.) பின்வரும் அட்டவணைப்படி அரசால் ஒப்பளிப்பு செய்யப்படுகிறது. தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் வழங்கும் ஒப்புதல் ஆணை மற்றும் சான்றொப்பம் அடிப்படையில் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு/ கல்லூரிகளுக்கு உரிய தொகையினை தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம் விடுவிக்க வேண்டும். இனிவரும் ஆண்டுகளிலும் இந்த நடைமுறையே பின்பற்றப்பட வேண்டும்.

**(ரூபாய் கோடியில்)**

| வ. எண் | 7.5% ஒதுக்கீட்டு இடங்களில் பொறியியல் கல்லூரிகளில் சேரும் மாணாக்கர் | கல்விக் கட்டணம் | விடுதிக் கட்டணம் | போக்குவரத்துக் கட்டணம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | பொது பிரிவு | 36.9441 | 20.5092 | 2.7135 | 60.1668 |
| 2. | ஆதி திராவிடர் | 8.2098 | 4.5576 | 0.6030 | 13.3704 |
| 3. | பழங்குடியினர் | 0.4561 | 0.2532 | 0.0335 | 0.7428 |
| | மொத்தம் | 45.6100 | 25.3200 | 3.3500 | 74.2800 |

இ) ஒவ்வொரு கல்வியாண்டின் தொடக்கத்திலும் நூறு விழுக்காடு படிப்புக் கட்டணம் விடுவிக்கப்பட வேண்டும் மற்றும் விடுதிக் கட்டணம் மற்றும் போக்குவரத்துக் கட்டணத்தில் காலாண்டுக்கான கட்டணம் முன்னதாக விடுவிக்கப்பட வேண்டும்.

ஈ) தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் கீழ்க்கண்ட அறிவுறுத்தல்களை அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்:

1. 7.5 விழுக்காடு முன்னுரிமை அடிப்படையில் பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கை பெறும் மாணாக்கர்களிடம் எந்த கட்டணத்தையும் கல்வி நிறுவனங்கள் வசூலிக்கக் கூடாது.

2. மாணவர்களிடம் திருப்பி வழங்கக் கூடிய காப்புத் தொகை கட்டணம் (Caution Deposit), நூலகக் கட்டணம் மற்றும் உணவு விடுதி காப்புத் தொகை கட்டணம் (Mess Fee Deposit) போன்றவற்றையும் மாணாக்கர்களிடமிருந்து வசூலிக்கக் கூடாது.

3. ஒவ்வொரு கல்லூரிகளிலும் 7.5 விழுக்காடு முன்னுரிமை அடிப்படையில் பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கை பெறும் மாணாக்கர்களின் குறையினை தீர்ப்பதற்காக குறைதீர்ப்பு பிரிவு (Redressal Cell) உருவாக்கப்பட வேண்டும்.

(உ) இத்திட்டத்தின் கீழ் பயன் பெறும் மாணாக்கர்களுக்கு பிற படிப்புதவி திட்டத்தின் கீழ் உதவி தொகை வழங்கப்படாததை உறுதி செய்யுமாறு தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று, தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகத்திற்கு (Tamil Nadu Medical Services Corporation Ltd.) வழங்குவதற்கு தொழில்நுட்பக் கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

7. மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்கண்ட புதிய கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

| | |
|---|---|
| 2203-00 தொழில்நுட்பக் கல்வி<br>112- பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் நிறுவனங்கள் - மாநிலச் செலவினங்கள்<br>AK - 7.5 சதவீதம் முன்னுரிமையின் கீழ் அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கல்வி கட்டணங்கள் செலுத்துதல்<br>312- படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் 09-ஏனையவை<br>(IFHRMS த.தொ.கு. 2203 00 112 AK 312 09) | ரூ. 36,94,41,000/- |

| | |
|---|---|
| 2203-00 தொழில்நுட்பக் கல்வி<br>112- பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் நிறுவனங்கள் - மாநிலச் செலவினங்கள்<br>AL - 7.5 சதவீதம் முன்னுரிமையின் கீழ் அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு விடுதிக் கட்டணங்கள் செலுத்துதல்<br>312- படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் 09-ஏனையவை<br>(IFHRMS த.தொ.கு. 2203 00 112 AL 312 09) | ரூ. 20,50,92,000/- |
| 2203-00 தொழில்நுட்பக் கல்வி<br>112- பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் நிறுவனங்கள் - மாநிலச் செலவினங்கள்<br>AM - 7.5 சதவீதம் முன்னுரிமையின் கீழ் அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு போக்குவரத்துக் கட்டணங்கள் செலுத்துதல்<br>312- படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் 09-ஏனையவை<br>(IFHRMS த.தொ.கு. 2203 00 112 AM 312 09) | ரூ. 2,71,35,000/- |
| 2203-00 தொழில்நுட்பக் கல்வி<br>789- ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் - மாநிலச் செலவினங்கள்<br>AC - 7.5 சதவீதம் முன்னுரிமையின் கீழ் அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கல்விக் கட்டணங்கள் செலுத்துதல்<br>312- படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் 09-ஏனையவை<br>(IFHRMS த.தொ.கு. 2203 00 789 AC 312 09) | ரூ. 8,20,98,000/- |
| 2203-00 தொழில்நுட்பக் கல்வி<br>789- ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் - மாநிலச் செலவினங்கள்<br>AD - 7.5 சதவீதம் முன்னுரிமையின் கீழ் அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு விடுதிக் கட்டணங்கள் செலுத்துதல்<br>312- படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் 09-ஏனையவை<br>(IFHRMS த.தொ.கு. 2203 00 789 AD 312 09) | ரூ. 4,55,76,000/- |

...8

| | |
|---|---|
| 2203-00 தொழில்நுட்பக் கல்வி<br>789- ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் - மாநிலச் செலவினங்கள்<br>AE - 7.5 சதவீதம் முன்னுரிமையின் கீழ் அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு போக்குவரத்துக் கட்டணங்கள் செலுத்துதல்<br>312- படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் 09-ஏனையவை<br>(IFHRMS த.தொ.கு. 2203 00 789 AE 312 09) | ரூ. 60,30,000/- |
| 2203-00 தொழில்நுட்பக் கல்வி<br>796- பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் - மாநிலச் செலவினங்கள்<br>AA - 7.5 சதவீதம் முன்னுரிமையின் கீழ் அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கல்விக் கட்டணங்கள் செலுத்துதல்<br>312- படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் 09-ஏனையவை<br>(IFHRMS த.தொ.கு. 2203 00 796 AA 312 09) | ரூ. 45,61,000/- |
| 2203-00 தொழில்நுட்பக் கல்வி<br>796- பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் - மாநிலச் செலவினங்கள்<br>AB - 7.5 சதவீதம் முன்னுரிமையின் கீழ் அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு விடுதிக் கட்டணங்கள் செலுத்துதல்<br>312- படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் 09-ஏனையவை<br>(IFHRMS த.தொ.கு. 2203 00 796 AB 312 09) | ரூ. 25,32,000/- |
| 2203-00 தொழில்நுட்பக் கல்வி<br>796- பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் - மாநிலச் செலவினங்கள்<br>AC - 7.5 சதவீதம் முன்னுரிமையின் கீழ் அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு போக்குவரத்துக் கட்டணங்கள் செலுத்துதல்<br>312- படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் 09-ஏனையவை<br>(IFHRMS த.தொ.கு. 2203 00 796 AC 312 09) | ரூ. 3,35,000/- |
| **மொத்தம்** | **ரூ. 74,28,00,000/-** |

8. மேலே பத்தி 7-இல் துவக்கப்பட்ட புதிய கணக்குத் தலைப்பிற்கு தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

9. மேற்படி புதிய கணக்குத் தலைப்பை தங்களது பதிவேடுகளில் துவக்கிக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்/ கருவூல அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

10. மேலே பத்தி 5-இல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புதுப்பணியாகும் (New Service). மேற்காண் செலவினத் தொகையினை முதற்கண் தன்னுடைய நிதியிலிருந்து செலவிடுவதற்கு தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழக மேலாண்மை இயக்குநருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. 2021-22 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்ட பின், தொழில்நுட்பக் கல்வி இயக்குநரால் அத்தொகை பெறப்பட்டு மருத்துவ சேவைகள் கழகத்திற்கு வழங்கப்படும். மேலும் இச்செலவினத்தை 2021-22 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் (Supplementry Estimate) சேர்க்கும் பொருட்டு உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் இதற்கான குறிப்புடன் நிதி (வ.செ.1) த் துறைக்கு அனுப்புமாறு தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

11. இவ்வரசாணை நிதித்துறை அ.சா.கு. எண். 182/JS (GKT). நாள் 15.11.2021 மற்றும் கூடுதல் பேரேட்டு எண்.803 (எண்ணூற்று மூன்று) இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா. கார்த்திகேயன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை -25
பதிவாளர், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை -25
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை, சென்னை -9
அரசு செயலாளர், வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை, சென்னை -9
அரசு செயலாளர், சட்டத் துறை, சென்னை -9
அரசு முதன்மைச் செயலாளர், மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை, சென்னை - 9
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம், சென்னை -8
அனைத்து பொறியியல் கல்லூரிகளின் முதல்வர்கள் (தொழில்நுட்பக்கல்வி இயக்குநர் வழியாக)

சம்பள கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை -35
மாநில கணக்காயர், சென்னை -18
இருப்பிட தணிக்கை அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை-9
நகல்
நிதித் துறை(கல்வி I/ வ.செ.பொ I & II / வ.வ I), சென்னை -9
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை -9
மாண்புமிகு அமைச்சர் (உயர்கல்வி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை -9
அரசு முதன்மைச் செயலாளர், உயர்கல்வித் துறை, சென்னை -9
அனைத்து பிரிவுகள், உயர்கல்வித் துறை, சென்னை -9
இகோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

15/11/2021

பிரிவு அலுவலர்

15/11/2021